# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**CC 167/2019**

**Deposition of Witness for PW10**

| | | | |
|---|---|---|---|
| Name | : கேசவன் | Caste | : |
| Father/Husband Name | : சொக்கலிங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**( accused absent petition filed and allowed)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 11.05.2026**

**முதல்விசாரணை**

நான் எம்.எழுமலை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது எம். கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.06.2010ம் தேதி மாலை 17.00 மணிக்கு எம். கல்லுப்பட்டி காவல் நிலைய அப்போதைய பொறுப்பு சார்பு ஆய்வாளர் திருமதி. எம்.பாக்கிமேரி என்பவர் நிலையத்தில் இருந்த போது சூலுப்புரம் கிராமத்தை சேர்ந்த பால்ராஜ் மனைவி தங்கமணி வயது 45/2019 என்பவர் நிலையத்தில் அஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண் 66/2019பிரிவுகள் 392 இதசவாக வழக்கு பதிவு செய்து பின்னர் வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு ஆய்வாளர் ஜெஸ்மீன் மும்தாஜ் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் பட்டியல் சாட்சிகளை சார்பு ஆய்வாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்பு அவர் பணியிடை மாறுதல் சென்ற பின்பு வழக்கினை ஆய்வாளர் தினகரன்

அவர்கள் மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 31.08.2019ல் உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் மதியம் 13.00 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைதுள்ளார். பின்னர் எதிரியை விசாரித்ததில் அவர் எந்த வித அச்சுறுத்தலும் துண்டுதலுமின்றி தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கடந்த 24.07.2019 இரவு சுமார் 8.20 மணிக்கு பேரையூர் சாலையில் செட்டச்சியம்மன் கோவில் அருகே ஒரு பெண்ணின் கழுத்தில் இருந்து தங்க செயினை அத்துக்கொண்ட சென்றுவிட்டதாகவும் இந்நிலையில் கடந்த 05.08.2019ம் தேதி இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது உசிலம்பட்டி வட்ட காவல் ஆய்வாளர் தன்னை பிடித்து விசாரித்து கைது செய்தார் என்றும், அவரிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் திருடிய நகைகளை ஒப்படைத்தார் என்றும், இந்நிலையில் மேற்படி வழக்கு பிணையில் வெளியே வந்து உசிலம்பட்டி பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த போது இவ்வழக்கின் காவல் ஆய்வாளர் தன்னை கைது செய்ததாகவும் கூறியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்படி உசிலம்பட்டி நகர காவல் நிலைய பொறுப்பில் இருந்த இவ்வழக்கின் சொத்தான தங்கசெயினை காவல் ஆய்வாளர் தன்வசம் பெற்று படிவம் 91ன்படி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.8 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் தன்னை உண்மையென தெரியவந்ததால் எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

புகார் எழுத்து மூலமாக தரப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரை எழுதியது வேறோரு கையெழுத்தும் அதில் கையொப்பமிட்டது வேறோரு கையெழுத்தும் என்றால் சரிதான். புகாரில்

எதிரியின் பெயர், முகவரி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 8வரையுள்ள சாட்சிகள் வாதியின் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு சென்றதாக சங்கதிகள் இடம்பெறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து இரண்டு மாதம் கழித்து தான் எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் பெறப்பட்ட சாட்சிகளின் ஊரானது வாதியின் ஊரான சூலப்புரம்எ ன்றால் சரிதான். எதிரியை கைது செய்து அடையாள அணிவகுப்பு நடத்தியதாக ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். சந்தேகத்தின் அடிப்படையில் புள்ளிவிபர கணக்கிற்காக வேறு வழக்கில் மேற்படி எதிரியை இணைத்து ஒப்புதல் வாக்குமூலத்தையும் அத்தாட்சிகளையும் காவல்நிலையத்திலேயே வைத்து விசாரணை அதிகாரி தயார் செய்தார் என்றும், நான் அவர் மேலதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் கடந்த பின்பு மாலையில் தான் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவம் இடத்திற்கு அன்றையே இரவு நேரத்தில் சென்று பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டுளள்து என்றால் சரிதான்.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.12 11:13:37 +0530